**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் மார்கழி திங்கள் 1–ம் நாள்

2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் திங்கட்கிழமை

இடைநிலை மனு எண்.2/2022

இன்

அசல் வழக்கு எண்.70/2022

(CNR.No.TNTR21-000093-2022)

...

தணிகாசலம் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. நடராஜன்
2. வெங்கடேசன்
3. ஹரிகிருஷ்ணன்
4. எத்திராஜுலு ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 02.12.2024 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S.கார்த்திகேயன், E. தணிகைராஜ் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் A.ஹரிதாஸ், A.அகிலா ஆகியோர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

இவ்வழக்கு முடியும்வரை மனுச் சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தினை, எதிர்மனுதாரர்களோ/1 முதல் 4 பிரதிவாதிகளோ, அவர்வகை ஆட்களோ இடைஞ்சல் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 & 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>மனுவின் சுருக்கம்:–</u>**

(அ) வழக்கு புல எண்.292/1ல் விஸ்தீரணம் 20 செண்ட் உண்மையில் மனுதாரரின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது. அதற்கு ஆதரவாக மனுதாரரின் தாத்தா கண்ணம்ம நாயுடு பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது. நீண்டகாலமாக அனுபவித்தற்கு ஆதரவாக துணை வட்டாட்சியர் கண்ணம்ம நாயுடு பெயரில் அடங்கல் கொடுத்துள்ளார். கண்ணம்ம நாயுடு இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகள் வழக்கு சொத்துக்களை அடைந்து, பெண் வாரிசுகள் வாய்மொழி அனுமதி கொடுத்ததன்பேரில் மனுதாரரின்

தகப்பனார் பக்தவச்சலம் மற்றும் 1ம் பிரதிவாதி நடராஜன் வாக்கரலாக சம்மதித்து புல எண்.292/1ல் வடக்கு பக்கம் வீடு கட்டியுள்ளனர். 1ம் பிரதிவாதி தனித்து B அட்டவணைச் சொத்தில் மேற்கு பக்கம் மூத்த சகோதரர் என்ற பேரில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார். 2 முதல் 4 பிரதிவாதிகள் அவரது குடும்ப உறுப்பினர்கள் ஆவார்கள்.

(ஆ) மனுதாரரின் தகப்பனார் கிழக்கு பக்கம் (C அட்டவணை) சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார். A அட்டவணை சொத்து அவர்களுக்கு பாதையாக ஒதுக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் தகப்பனார் A மற்றும் C அட்டவணை சொத்தை அவரது காலம் வரை அனுபவித்து வந்தார். மனுதாரரின் தகப்பனார் 22.12.2017ம் தேதி இறந்த பின்பு அவரது வாரிசான மனுதாரர் C அட்டவணை சொத்தை அடைந்து இன்றுவரை அனுபவத்தில் இருந்து வீட்டு வரி, மின்னிணைப்பு மனுதாரர் மற்றும் அவரது தகப்பனார் பெயரில் உள்ளது. கண்ணம்ம நாயுடுவின் வாரிசுகள் கூட்டுக்குடும்ப சொத்துக்களை அனுபவித்து வந்த நிலையில் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்ட நிலையில் பெண் வாரிசுகள் மனுதாரரின் தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும் மனுச் சொத்தில் தொடர்ந்து அனுபவத்தில் இருக்க ஒப்புக் கொண்டுள்ளனர்.

(இ) மீதியுள்ள சொத்துக்களைப் பொறுத்து பெண் வாரிசுகள் பாகப்பிரிவினை கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.54/2015 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. வழக்கு நிலுவையில் இருந்தபோது 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை அனுபவிக்க விடாமல் பிரச்சனை செய்தனர். மேலும் மனுதாரருடன் மனுதாரரின் மனைவியையும் தகாத வார்த்தைகளால் பேசி தேவையில்லாத சண்டைகளை உருவாக்கியதோடு A அட்டவணை சொத்து வழியாக C அட்டவணை சொத்துக்கு செல்ல வழிவிடாமல் பிரச்சனை செய்தனர். எனவே கிராம நிர்வாக அலுவலரை அணுகி வருவாய் ஆவணங்களை பார்த்தபோது, 292/1A, 292/1B, 292/1C என அனைத்தும் 1ம் பிரதிவாதி பெயரில் இருந்தது.

(ஈ) மனுதாரர் 292/1C ஐ தனித்து அனுபவித்தும், 292/1A ஐ பொதுவில் 1ம் பிரதிவாதியுடன் தன் பாகத்திற்கு செல்லும் பாதையாக அனுபவித்து வருகிறார். 20.09.2021ம் தேதி மேற்படி தவறான பட்டவை ரத்து செய்ய மனு கொடுத்து அம்மனு 292/1C ஐ பொறுத்து நிலுவையில் உள்ளது. 292/1A ல் விஸ்தீரணம் 0.0.31 ஏர்ஸ் A அட்டவணைச் சொத்து 1ம் பிரதிவாதி மற்றும் மனுதாரரின் தகப்பனாரால் ஒதுக்கப்பட்ட பொதுபாதை ஆகும். 292/1B ல் விஸ்தீரணம் 0.3.49 ஏர்ஸ் B அட்டவணைச் சொத்து 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது. அவ்வாறே 292/1C ல் விஸ்தீரணம் 0.4.20 ஏர்ஸ் C அட்டவணைச் சொத்து வாதிக்கு சொந்தமானது.

(உ) வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் பிரதிவாதி நில அளவை துறையை அணுகி வழக்கு சொத்தை அளக்க முயற்சித்தார். பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் இருந்ததால் எந்த அறிவிப்பும் மனுதாரருக்கு வரவில்லை.

அதன்பின்னிட்டு பட்டா ரத்து நடவடிக்கை நிலுவையில் இருப்பதை நிலஅளவையருக்கு தெரிவித்து அது உரிய காலத்தில் நிறுத்தப்பட்டது. மனுதாரர் எழுத்துமூல ஆட்சேபணையை வருவாய் அதிகாரிகளுக்கு 14.09.2022ம் தேதியிட்டு அனுப்பி நில அளவையை இந்த மனுதாரரின் மனு முடியும் வரை நிறுத்த கோரியுள்ளார்.

(ஊ) 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பட்டா அவர்கள் பெயரில் இருப்பதை சாதகமாக எடுத்துக் கொண்டு மனுதாரரின் அமைதியான அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருகிறார்கள். மனுதாரருக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதை தவிர வேறு வழியில்லை. பாக பிரிவினை வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு பழிவாங்கும் நடவடிக்கையாக எல்லா விதத்திலேயும் தொல்லைகள் தொடர்ந்து கொடுத்து வருகிறார்கள். எனவே இந்த வழக்கை தாக்கல் செய்வதை தவிர வேறு வழியில்லை. தொடாச்சியாக பிரதிவாதிகள், வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருவதால் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

2. **<u>மறுப்புரையின் சுருக்கம்:—</u>**

(அ) மனு பத்தி 2ல் கூறியுள்ளவை மறுக்கப்படுகிறது. புலஎண்.292/1ல் விஸ்தீரணம் 0.20 செண்ட் உண்மையில் மனுதாரரின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டு வருவாய் ஆவணங்கள் மனுதாரர் தாத்தா பெயரில் இருந்ததாக சொல்வது உண்மை. பிராமாண பத்திரம் பத்தி 3ல் கூறியுள்ளவை பகுதி சரியாகும். எதிர்மனுதாரர் புல எண்.292/1ன் மேற்கு பக்கம் வீடு கட்டியுள்ளார் என்பது உண்மை. கண்ணம்ம நாயுடு இறந்த பின்பு அவரது வாரிசுகள் உரிமை அடைந்ததாக கூறுவது மறுக்கப்படுகிறது. மனுதாரர் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை. பிராமாண பத்திரம் பத்தி 5ல் கூறியுள்ளவை மறுக்கப்படுகிறது. அசல் வழ்கு எண்.54/2015 இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பது உண்மை. மற்ற விவரங்கள் அனைத்தும் மறுக்கப்படுகிறது.

(அ) பாரா 6ல் கூறியுள்ளவை மறுக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்கள் எந்த காலத்திலும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. மேற்படி பிராதில் கூறியுள்ள அனைத்து விவரங்களும் மறுக்கப்படுகிறது. பாரா 7ல் கூறியுள்ள விவரங்கள் பகுதி சரியாகும். இந்த எதிர்மனுதாரர் பெயரில் வழக்கு சொத்தின் பட்டா உள்ளது என்பது உண்மை. மனுதாரர் 292/1C ஐ சொந்தமாகவும், 292/1A ஐ பொதுவழியாகவும் அனுபவித்து வருவதாகவும் கூறியுள்ளது பொய். மனுதாரர் பட்டாவை ரத்து செய்ய மனு கொடுத்துள்ளார் என்பது உண்மை. மற்றவை மறுக்கப்படுகிறது. பாரா 8ல் கூறியுள்ளவை பொய். மேற்படி விவரத்தை நிரூபணம் செய்ய ஒரு ஆதாரமும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை.

(இ) பாரா 9ல் கூறியுள்ள விவரங்கள் பகுதி சரியாகும். இந்த எதிர்மனுதாரர் நிலஅளவை செய்ய ரசீது பெற்று நில அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்தபோது

மனுதாரர் சட்ட விரோதமாக நில அளவையரை வழக்கு சொத்தை அளக்க கூடாது என மிரட்டியுள்ளார். எனவே எதிர்மனுதாரர் சொத்து அளக்கப்படவில்லை. மற்ற விவரங்கள் மறுக்கப்படுகிறது. பத்தி 10ல் கூறியுள்ளவை முழுவதும் மறுக்கப்படுகிறது. கிராம நத்தம் புல எண். 292/1A, 1B, 1C உண்மையில் இந்த எதிர்மனுதாரருக்கு பட்டா எண்.472ன் மூலம் பாத்தியம். எதிர்மனுதாரர் வீடு கட்டி மின்னிணைப்பு பெற்று அனுபவித்து வருகிறார். கிராம நத்தம் புல எண். 292/1A, 1B, 1C க்கு எதிர்மனுதாரர்களே முழு உரிமையாளர்கள். இதர சொத்துக்களில் வேலிகாத்தான் மரங்கள் இருப்பதால் இந்த எதிர்மனுதாரர் தொடர்ச்சியாக அனுபவத்தில் இருந்து மேற்படி மரங்களை வெட்டி விற்று அனுபவித்து வருகிறார்.

(ஈ) மனுதாரர் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை. மனுதாரருக்கு எந்த முதல்நோக்கு வழக்கும் இல்லை. வழக்கு சொத்துக்கள் முழுவதுமாக மனுவில் குறிப்பிடப்படவில்லை. வழக்கு சொத்து வரையறுத்த நான்கு எல்லைகளுடன் கூறாமல் தவறாக உள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும். மனுதாரர் தனக்கு பாத்தியம் என்பதை காட்ட ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் பாத்திய அனுபவத்தில் இருந்தார் என்பதை காட்ட ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. கண்ணம்ம நாயுடு உறவுமுறையை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. கண்ணம்ம நாயுடு பெயரில் 1392ம் பசலி தவிர வேறு எந்த ஆவணமும் மனுதாரர் தரப்பில் இல்லை,

(உ) எந்த முதல்நோக்கு வழக்கும் இல்லை. எந்த உரிமையும் இல்லாத மனுதாரர் வழக்கு சொத்தை அபகரிக்க நினைக்கிறார். இந்த எதிர்மனுதாரர்களை வழக்கு சொத்தை அனுபவிக்கவிடாமல் தடுக்கும் எந்த உத்தரவும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும். மனுதாரர் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லை. எந்த முதல்நோக்கு வழக்கும் இல்லை. இந்த மனுவில் எந்த நல்லெண்ணமும் இல்லை. வீட்டு வரி ரசீதுகள் தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ஒருதரப்பு இடைக்கால உறுத்துக் கட்டளை உத்தரவை பெற்றுக் கொண்டு மனுதாரரும் அவரது மனைவியும் இந்த எதிர்மனுதாரரை தொந்தரவு செய்யும் நோக்கில் பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். இந்த எதிர்மனுதாரர் மீது பொய்யான புகார்களை அளித்தனர். மனுதாரர்தான் வழக்கு புல எண். 292/1A, 1B, 1Cல் எதிர்மனுதாரரின் அனுபவத்திற்கு இடைஞ்ச் செய்து வருகிறார். எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:–</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. <u>தீர்வு:–</u>

இரு தரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பு ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கில் A அட்டவணை சொத்தான பொதுவழியாகதான்

மனுதாரரால் C அட்டவணைச் சொத்துக்கு செல்ல முடியும் என்றும் எதிர்மனுதாரர்கள் A அட்டவணை சொத்தில் மனுதாரர் அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருவதால் தன் வீட்டிற்கு போக இயலாமல் சிரமப்பட்டு வருவதாகவும் எனவே A அட்டவணை சொத்தை மனுதாரர் அமைதியாக அனுபவம் செய்து வருவதை இந்த எதிர்மனுதாரர் அசல் வழக்கு முடியும்வரை எந்த இடைஞ்சலும் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியது அவசியம் என கூறி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

6. கற்றறிந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு சொத்து மனுதாரருக்கு பாத்தியம் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையில் உறவுமுறையை விளக்க எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யாத நிலையில் உறுத்துக் கட்டளை வழங்க இயலாது என்றும் மனு சொத்து எதிர்மனுதாரரின் தனிப்பட்ட பாத்திய அனுபவத்தில் உள்ள சொத்து என்றும், உறுத்துக் கட்டளை பரிகாரம் கொடுக்கும்பட்சத்தில் மனுதாரரால் எதிர்மனுதாரர்களுக்கு பல்வேறு தொல்லைகள் ஏற்படும் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய கோரி வாதிடப்பட்டது.

7. வழக்கு ஆவணங்களை பார்வையிடும்போது வழக்கு புல எண். 292/1C ல் பட்டா மாறுதல் கோரி இவ்வழக்கு வாதியால் கொடுக்கப்பட்ட மனு நிலுவையில் இருந்து வருகிறது என்பதை ம.சா.ஆ.9 ன் மூலம் அறிய முடிகிறது. பட்டா மாறுதல் கோரி மனுதாரர் கொடுத்த மனுக்கள் ம.சா.ஆ.8 மற்றும் ம.சா.ஆ.10 ஆக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டா எ.ம.சா.ஆ.1 ஆகவும், வரி ரசீதுகள் எ.ம.சா.ஆ.2 முதல் எ.ம.சா.ஆ.10 ஆகவும், மின் கட்டண ரசீது எ.ம.சா.ஆ.11 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் A அட்டவணை சொத்து வாதி, பிரதிவாதிகளின் வீட்டிற்கு முன்னால் உள்ள பொதுவான பகுதியாக உள்ளதாக அறிய முடிகிறது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் புல எண்.292/1A பொதுமக்கள் பயன்படுத்தும் பொதுபாதையாகும் என்று குறிப்பிட்டு அவ்வாறே வரைபடமும் தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து பொதுபாதையா? இல்லையா? என்று அசல் வழக்கின் முழு விசாரணைக்கு பின்பு தெரியவரும் என்ற நிலையில் வழக்கு சொத்தை இவ்வழக்கின் சூழ்நிலைகளில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் அப்படியே தொடர உத்தரவிடுவதே இவ்வழக்கின் சூழலில் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையே (Status–quo) இவ்வழக்கு முடியும்வரை வைத்திருக்க உத்தரவிடப்படுகிறது. அவரவர் செலவுத் தொகையை

அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/- R.D.Gurulakshmi
16.12.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர் தரப்பு சாட்சி:– இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.த.சா.ஆ.1 | 06.10.2022 | சாகுபடிஅடங்கல் கணக்கு – சான்றிட்டநகல் |
| 2. | ம.த.சா.ஆ.2 | –– | வீட்டு வரி ரசீதுகள் (10) –அசல் |
| 3. | ம.த.சா.ஆ.3 | –– | வீட்டு வரி ரசீதுகள் (2) –அசல் |
| 4. | ம.த.சா.ஆ.4 | –– | மின் பயனீட்டுக் கட்டண அட்டை –அசல் |
| 5. | ம.த.சா.ஆ.5 | 20.01.2022 | மின் கட்டண ரசீது (நகல்) |
| 6. | ம.த.சா.ஆ.6 | –– | மின் கட்டண ரசீதுகள் (அசல்) மற்றும் நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா – உண்மை நகல் |
| 7. | ம.த.சா.ஆ.7 | –– | புல வரைபடம் – உண்மை நகல் |
| 8. | ம.த.சா.ஆ.8 | 20.09.2021 | திருத்தணி வருவாய் கோட்டாட்சியருக்கு மனுதாரர் அளித்த மனு –அசல் |
| 9. | ம.த.சா.ஆ.9 | 28.10.2021 | திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் அளித்த பதில் –அசல் |
| 10. | ம.த.சா.ஆ.10 | 14.09.2022 | திருத்தணி வட்டாட்சியருக்கு மனுதாரர் அளித்த மனு–அசல் |
| 11. | ம.த.சா.ஆ.11 | –– | ஆதார் அட்டை – நகல் |
| 12. | ம.த.சா.ஆ.12 | –– | குடும்ப அட்டை – அசல் |
| 13. | ம.த.சா.ஆ.13 | –– | புகைபடம் மற்றும் குறுந்தகடு |

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :– இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.ம.த.சா.ஆ.1 | –– | பட்டா எண்.472 – சான்றிட்ட நகல் |
| 2. | எ.ம.த.சா.ஆ.2 | 21.03.2000 | வீட்டு வரி ரசீது அசல் |
| 3. | எ.ம.த.சா.ஆ.3 | 31.03.2001 | வீட்டு வரி ரசீது அசல் |

| | | | |
|---|---|---|---|
| 4. | ம.த.சா.ஆ.4 | 09.02.2002 | வீட்டு வரி ரசீது அசல் |
| 5. | ம.த.சா.ஆ.5 | 31.03.2003 | வீட்டு வரி ரசீது அசல் |
| 6. | எ.ம.த.சா.ஆ.6 | 24.02.2004 | வீட்டு வரி ரசீது அசல் |
| 7. | எ.ம.த.சா.ஆ.7 | 07.09.2007 | வீட்டு வரி ரசீது அசல் |
| 8. | எ.ம.த.சா.ஆ.8 | 22.03.2016 | வீட்டு வரி ரசீது அசல் |
| 9. | எ.ம.த.சா.ஆ.9 | 22.03.2017 | வீட்டு வரி ரசீது அசல் |
| 10. | எ.ம.த.சா.ஆ.10 | 05.10.2022 | வீட்டு வரி ரசீது அசல் |
| 11. | எ.ம.த.சா.ஆ.11 | 12.11.2018 | மின்கட்டண ரசீது – அசல் |

நீதிமன்ற சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை

சாட்சி தரப்பு சான்றாவணங்கள் :– இல்லை

Sd/- R.D.Gurulakshmi
16.12.2024
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.